# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஜூன் 30, 2018 | Weekly E-paper • June 30, 2018


# எத்தனை பொய் எத்தனை முரண் எத்தனை வஞ்சகம்!




• சுப.வீரபாண்டியன்

அண்மையில் திமுக செயல்தலைவர் தளபதி ஸ்டாலின் ஸ்ரீரங்கம் சென்றிருந்தது குறித்துப் பல்வேறு செய்திகளும், அவற்றைத் தொடர்ந்து பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன. ஸ்ரீரங்கம் கோயிலில், சுக்ரபிரிதி யாகம் செய்த காரணத்தால், குமாரசாமி, கர்நாடக முதலமைச்சர் ஆகி விட்டதாக அவர் சொன்னதை அடிப்படையாகக் கொண்டு, ஸ்டாலினும் அதே முதலமைச்சர்ஆசையில் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சென்றதாகவும், அங்கு அவருக்குக் கோயில் வாயிலிலேயே கோயில் பட்டர்கள் பெரும் வரவேற்பு கொடுத்தனர் என்றும் செய்திகள் வெளியாகின. யானை மாலையிட, பட்டர்கள் வரவேற்கும் காட்சியைத் தொலைக்காட்சிகள் படமாகவே காட்டின.



குறிப்பாகத் தினமலர் இந்தச் செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்ந்தது. "தேர்தலில் வாக்குகள் வேண்டுமென்றால், திமுகவினர் குடுமி வளர்த்துக் கொண்டு கோயிலுக்கே வந்து வழிபாடு செய்வார்கள்" என்று 'மகா யோக்கியர்' சோ எப்போதோ ஒருமுறை சொன்னதாகவும், அது இப்போது பலித்து விட்டதென்றும் புலனத்தில் (வாட்ஸ் அப்) செய்திகள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டன. திராவிட இயக்கம் கடைசியில் இந்து மதத்திடம் வந்து சரணடைந்து விட்டடது என்று எழுதிப் பலர் மகிழ்ச்சிக் கூத்தாடினார்.

"எனக்குத் தெரிந்தவரை கடந்த ஐந்து நாள்களாக அங்கு யாகம் நடந்து வருகிறது. தான் முதல்வர் ஆகி விட வேண்டும் என்ற ஆசையில் ஸ்டாலின் இந்த யாகத்தை நடத்தியுள்ளார். பக்தி நல்லதுதான். ஆனால் யாகம் நடத்தி முதல்வர் ஆகி விட முடியாது" என்றார், அதிகாரிகளை விட ஊடகவியல் நண்பர்களிடம் மட்டுமே அதிகம் பேசிக் கொண்டிருக்கும் ஒரு தமிழக அமைச்சர். "கண்ணாடியைத் திருப்பினால், ஆட்டோ ஓடுமா?" என்று கேலி பேசினார் ஒரு கட்சித் தலைவர்.

இப்போது அங்கு உண்மையில் என்ன நடந்தது என்று பார்க்கலாம்.

திருச்சியில், திமுக சிறுபான்மை அணியினர் நடத்திய நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற தளபதி, ஸ்ரீரங்கத்தில் இரண்டு சோடிகளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகச் ஸ்ரீரங்கம் சென்றார். அந்தத் திருமண மண்டபம் கோயிலுக்கு எதிரில் உள்ளது. கோயில் வாயிலைத் தாண்டியே அந்த மண்டபத்திற்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும்போது, கோயில் வாயிலில் ஒரு பெரும் கூட்டம் நின்று கொண்டிருந்தது. கோயில் யானையும் அங்கு நின்றது. கோயில் பட்டர்கள் அனைவரும் 'பவ்வியமாக' நிற்க, இசை முழங்க வரவேற்பும் நிகழ்ந்தது.

தன்னை வரவேற்கவே அனைவரும் கூடி நிற்கின்றனர் என்பதைப் புரிந்துகொண்ட தளபதி, அவர்களை மதிக்காமல் கடந்து செல்லக்கூடாது என்ற நாகரிகம் கருதித் தன் மகிழுந்தை விட்டு இறங்கினார். பட்டர்கள் பொன்னாடை போர்த்தினர். யானை மாலையிட்டது. தளபதி நெற்றியில் பட்டர்கள் குங்குமம் வைத்தனர். அவர்களின் வரவேற்பை நாகரிகம் கருதி ஏற்றுக்கொண்ட தளபதியை அவர்கள் கோயிலுக்குள் வருமாறு அழைத்தனர். "நேரமில்லை" என்று கூறி நயமாக மறுத்துவிட்டு, அவர்கள் முன்னிலையிலேயே அவர்கள் இட்ட குங்குமம் அல்லது திருநீற்றையும் அழித்துவிட்டு வண்டியில் ஏறி மண்டபம் சென்றார்.

இவ்வாறு நடந்தது என்பதை நான் சொல்லவில்லை, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேடு உள்ளிட்ட பல ஏடுகள் கூறியுள்ளன. நடந்ததற்கும் சொல்லப்படுவதற்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளதே ஏன் என்பதை ஆராயுமுன், சொல்லப்பட்ட பொய்களுக்குள் எத்தனை முரண்பாடுகள் என்பதை முதலில் பார்க்கலாம்.

கோயிலில் யாகம் வளர்க்க வந்தார் என்கின்றனர். யாகம் வளர்க்க வந்தவர், கோயிலுக்குள் வரவே மறுத்து விட்டார் என்றும் கூறுகின்றனர். இந்து மதத்திடம் அடிபணிந்து விட்டார் என்று 'ஆனந்தக் கூத்தாடும்' அவர்கள், நெற்றிக்குறியை அழித்ததன் மூலம் இந்து மதத்தை அவமதித்து விட்டார் என்றும் கூறுகின்றனர். குமாரசாமியைப் பின்பற்றி யாகம் வளர்க்க வந்தார் என்கின்றனர். ஆனால் அங்கு நடந்த திருமண வீட்டில், காவிரி ஆணையம் பற்றிக் குழப்பும் குமாரசாமியைக் கண்டித்துப் பேசியுள்ளார். அதனையும் நாளேடுகள் வெளியிட்டுள்ளன. எத்தனை எத்தனை முரண்கள்!!

உண்மை பேசினால் முரண் வராது. பொய் பேசும்போது முரண்களைத் தவிர்க்க முடியாது. இத்தனை பொய்களுக்கும் இத்தனை முரண்களுக்கும் என்ன காரணம்? பொய், பித்தலாட்டம் மூலமாகவேனும் திமுகவை அழித்துவிட வேண்டும் என்ற வஞ்சகம்தான் காரணம்.

பொய்யும், முரணும், வஞ்சகமும் வென்றதாக வரலாறு இல்லை. தோற்கும், அவை மறுபடியும் மறுபடியும் தோற்கும்!


•

# ஆளுநர் மாளிகை அறிக்கை

## கேள்வி ஒன்று... விடை நான்கு...

நேர்காணல்: மா.உதயகுமார்

தமிழகத்தின் ஆளுநராகப் பன்வாரிலால் புரோகித் பொறுப்பேற்ற பின்னர் தமிழக அரசின் நடவடிக்கைகளில் மூக்கை நுழைத்துக் கொண்டு ஆய்வு செய்கிறேன் என்ற பெயரில் மாநில உரிமைகளை மீறி வருகிறார். இதனை எதிர்க்கட்சிகள் வன்மையாகக் கண்டித்து வருகின்றன. அண்மையில் ஆளுநர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில் ஆளுநரின் செயல்பாடுகளில் தலையிடுபவர்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று கூறப்பட்டுள்ளது குறித்து நான்கு அரசியல் கட்சி முன்னணியினரிடம் கருத்து கேட்டபோது அவர்கள் சொன்னவை...



PRESS RELEASE

A report has appeared in the Press that the Leader of the Opposition sought to lay siege to the area around Raj Bhavan to protest against the district visits of the Hon'ble Governor.

In this connection, attention is drawn to the Press release issued on a similar matter in December, 2017, stating the official stance of the Raj Bhavan explaining the legal provisions.

It is felt necessary to reiterate the correct factual position so as to avoid any legal misinterpretation. The institution of the Governor is that of a Constitutional authority who enjoys full authority and freedom to visit any part of the State. During such tours protocol dictates that the District Collector shall receive him and extend the prescribed courtesies. In the capacity of the Hon'ble Governor being the Head of the Executive, he enjoys unhindered freedom to meet and interact with officials of the State who are members of the Executive wing.

It is very important to remember that for the Hon'ble Governor to take the right decisions at critical times and for being able to send meaningful monthly reports to the Hon'ble President, he should be familiar with the features and characteristics of the various districts and also be aware of the problems faced by the people.

1

The Hon'ble Governor during the course of his district visits interacts with district officials who make presentations about the prevailing conditions. **In no case so far has there been an instance of the Hon'ble Governor criticizing the performance of any department or of giving a direction to any official.** To the contrary, district officials take delight in informing the Governor about their schemes, programmes and achievements. The use of the word 'review' by the Leader of the Opposition is an attempt to mislead the people. He is either ignorant of the law or attempting to overawe by threatening to besiege Raj Bhavan or block the roads leading to the Raj Bhavan.

The office of the Governor is protected under Section 124 of the IPC which reads as follows:

**" Whoever, with the intention of inducing or compelling the President of India, or the Governor of any State, to exercise or refrain from exercising in any manner any of the lawful powers of such President or Governor, assaults or wrongfully restrains, or attempts wrongfully to restrain, or overawes, by means of criminal force or the show of criminal force, or attempts so to overawe, such President or Governor, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, and shall also be liable to fine. "**

2

Any attempt to overawe or assault or use criminal force will be dealt with as per the law. During the times of the initial district visits the Hon'ble Governor was engaged in trying to inform the provisions of the law to the Leader of the Opposition and other members of the opposing parties by inviting them to Raj Bhavan. Sufficient time was given for understanding the law so as to change course and abide by it.

The Hon'ble Governor is vested with the responsibility of protecting and defending the Constitution and this involves ensuring that the State is run according to the provisions of the law. Those who do not understand the correct legal position or do not wish to abide by the law should desist from making comments or pursuing actions which are violative of the law.

For the sake of the common people who are benefiting from the district visits of the Hon'ble Governor it is added, that such visits will continue in the same manner in the coming months.

SD/-
Joint Director (PR)

Raj Bhavan, Chennai.
Dated : 24.06.2018.

3



### சிற்பி செல்வராசு,

**தி.இ.த.பேரவை.**

தி.மு.க.வின் வரலாறு தெரியாமல் பேசுகிறார் பன்வாரிலால் புரோகித். தி.மு.கவின் வரலாற்று நூல்களை அவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். போராட்டங்களில் நெகிழ்ந்து வந்த வரலாறு, நெருப்பாற்றில் நீந்தி வந்த வரலாறு தி.மு.க. வினுடையது. எதிர்ப்புகள் வளர்ச்சியைக் குறைக்காது எழுச்சியை அதிகப்படுத்தும். ஆளுநர் மாளிகையின் இந்த அறிக்கையின் மூலம் இரட்டை ஆட்சி முறை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.



### வானதி சீனிவாசன், பா.ஜ.க.

நம்முடைய ஆளுநர் ராஜ்பவனை மக்களுக்குத் திறந்து விட்டிருக்கிறார். மத்திய அரசின் திட்டங்கள் எந்த அளவிற்கு மக்களிடம் சென்று சேர்ந்திருக்கிறது என்று ஆய்வு செய்கிறார். இதில் என்ன தவறு இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது அரசியலமைப்புச் சட்டப்படி தவறு என்றால் இங்கிருக்கும் மாநில அரசு அதை எதிர்க்க வேண்டும். ஆக அரசியலுக்காக எதிர்க்கக் கூடிய எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். கவர்னர் எந்த வித த்திலும் மாநில அரசுக்குப் புதிதாக உத்தரவுகள் பிறப்பிப்பதோ, அரசு பிறப்பித்த உத்தரவுகளை மாற்றுவதோ என்று எந்த வேலையிலும் அவர் ஈடுபடவில்லை. பல்வேறு வகைகளில் மக்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கவர்னருக்கு, அரசியலுக்காகக் கறுப்புக் கொடிகாட்டுவது என்பதாலும், அவருடைய காரைச் சேதப்படுத்துவது என்பதாலும் தான் ராஜ்பவன் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதுவும் அரசியலமைப்புச் சட்டத்தின்படி என்ன தண்டனையோ அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



### அருணன்,

**மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட்.**

யார் முதலமைச்சர் என்று முடிவு செய்து அமைச்சரவையை உருவாக்குவதுதான் ஆளுநரின் பணி. அதன்பிறகு அமைச்சரவையின் ஆலோசனைப்படிதான் ஆளுநர் இயங்க வேண்டும். பெரும்பான்மை இல்லாமல் மோடி அரசின் தயவில் இங்கு மாநில அரசு அமைந்திருக்கிறது. ஆளுநர் மாவட்டங்களுக்குப் பயணம் செய்து அங்குள்ள நிலையை மாநிலத்தில் உள்ள பா.ஜ.க தலைமைக்கு விவரங்கள் கொடுக்கப்போகிறார் என்கிற அய்யம் வலுக்கிறது. மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட நிர்வாக அதிகாரிகளை நேரில் சந்தித்து திட்டங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் ஆளுநருக்குக் கிடையாது. இதுவரை யாரும் செய்ததுமில்லை. இரண்டு கேள்விகள். பா.ஜ.க ஆட்சி செய்யும் மாநிலங்களின் ஆளுநர்கள் ஏன் ஆய்வு செயவதில்லை? இங்கேயே இதற்கு முன் ஜெயலலிதாவின் ஆட்சியில் ஏன் ஆய்வுகள் செய்யபடவில்லை? இது அதிகார மீறல் என்பதற்கு இந்தக் கேள்விகளே சரியான ஆதாரங்கள். பா.ஜ.க. அல்லாத அரசுகளை கவர்னர் மூலம் மிரட்டிப் பணியவைத்து தன்னுடைய காரியங்களைச் சாதித்து கொள்வது அரசியலமைப்பிற்கு விரோதமானது, கூட்டாட்சி முறைக்கு விரோதமானது. ஏற்கனெவே மாநில உரிமைகள் பறிக்கப்படுகிறது, மாநில சுயாட்சி அழிக்கப்படுகிறது. இன்னும் அந்த நிலையை ஆளுநர் மோசமாக்கிக் கொண்டிருக்கிறார்.



### கோபண்ணா, காங்கிரஸ்

அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநருடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அவர் நிர்வாகத்தின் தலைவரே தவிர, நேரடியாக நிர்வாகம் செய்ய முடியாது. அமைச்சரவையினுடைய அறிவுரையின் படி தான் ஆளுநர் செயல்பட முடியும். அத்தகைய அறிவுரை இல்லாமல் தன்னிச்சையாக அவர் செயல்பட முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கென்று அதிகாரங்கள் இருக்கின்றன. பணிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இப்பணிகளை முதலமைச்சரோ, அமைச்சரோ செய்ய வேண்டும். ஆனால் நிர்வாகத்தை ஆய்வு செய்கிறேன் என்று சொல்லி அப்பணிகளை ஆளுநர் செய்வது அரசமைப்புச் சட்ட த்திற்கு விரோதமானது. ஆளுநர் மாளிகையை நோக்கிய ஊர்வலம் என்பது ஆளுநர் மாளிகையை முடக்குகிற செயலாகக் கருதி அதற்காக ஏழு ஆண்டு சிறைத் தண்டனையைச் சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரிப்பது ஆளுநருடைய ஆணவத்தை வெளிப்படுத்துகிறது.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## தெற்கு மண்டல அமைப்புக் கூட்டம்



**பே**ரவையின் தெற்கு மண்டல அமைப்புக் கூட்டம் மதுரை அபர்ணா டவரில் உள்ள RPD அரங்கத்தில் 23-6-18 காலை 11 மணிக்கு நடைபெற்றது. துணைப் பொதுச் செயலாளர் சிங்கராயர் தலைமை தாங்கினார். துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், மாநில அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், மாநில மகளிரணிச் செயலாளர் மகாலட்சுமி, தெற்கு மண்டலச் செயலாளர் ஜெயம்பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெயபால் சண்முகம் வரவேற்புரையாற்றினார். மாவட்டப் பொறுப்பாளர்கள் நாகராஜ், சரவணன், சம்சுதீன், சந்தானம், கருப்பையா, போடிகாமராஜ், ஜெயச்சந்திரன், செகந்நாதன், அன்புமதி, பேரா.குருசாமி, மரு.குருசாமி, நாகபாலன் உள்பட தோழர்கள் தங்கள் மாவட்டங்களில் பேரவை செயல்பாடுகள் குறித்து விரிவாகப் பேசினார்கள். திண்டுக்கல், மதுரை, நெல்லை, குமரி மாவட்டங்களில் பொதுக் கூட்டம், கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டம், பயிலரங்கம் ஆகியவற்றை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்துவது எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் அமர்நாத் நன்றி கூறினார்.

## ‘குறள் வானம்’ நூல் அறிமுகம்




பேரா.சுபவீ அவர்களின் ‘குறள் வானம்‘ நூல் அறிமுகக் கருத்தரங்கம் 24.6.18 அன்று மாலை 5 மணிக்குத் திண்டுக்கல் வி.ஜி.எஸ். அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. தோழர் சுப்பிரமணியம் தலைமையேற்க தோழர் பிச்சை மணி வரவேற்புரையாற்றினார். கெய்டன், தமிழ் மன்னன், கணேசன், பெரியார் நம்பி, இராவணன், சிவக்குமார், ஆங்கில சேவியர், இரவிச்சந்திரன், புலேந்திரன் ஆகியோர் கருத்துரையைத் தொடர்ந்து, புலவர் வீரகலாநிதி சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் பேரா.சுபவீ பல அறிஞர்களின் திருக்குறள் உரையை எடுத்துக் காட்டி அதில் தனது தனித்துவமான சிந்தனையைப் பதிவு செய்திருக்கிறார். பல குழப்பமான உரைகளுக்கு விடை தந்திருக்கிறார். மிகச் சிறப்பான கருத்துக் கருவூலமாகக் ‘குறள் வானம்’ நூலை பேரா.சுபவீ படைத்திருக்கிறார் என்று தன் உரையைச் சுவைபட எடுத்துக் கூறினார். நிறைவில் தோழர் தமிழினியன் நன்றியுரையாற்றினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## உள்ளாட்சித் தேர்தல்..?!

**ம**க்களால் தேர்தெடுக்கப்பட்ட ஆட்சியே மக்களாட்சியாகும். இதில் உள்ளாட்சியும் அடங்கும்.

தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை உள்பட 12 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள், 529 பேரூராட்சிகள், 12,524 ஊராட்சிகள், 338 ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகளின் மூலம் ஏறத்தாழ 1 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பதவியேற்று உள்ளாட்சி நிர்வாகத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இவர்களுக்கான பதவிக் காலம் 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் தேதியுடன் முடிவடைந்து, அதன் பிறகு இன்று வரை உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை.

இதனால் மாநகரம், நகரம், ஒன்றியம், கிராமங்கள் உள்பட எந்த மக்களுக்கான பணியும் நடைபெறவில்லை.

தொடக்கத்தில் இரட்டை இலைச் சின்னத்தைப் பெற்றுக் கொண்டு தேர்தலை நடத்தலாம் என்று நினைத்த அ.தி.மு.க. ஆட்சி, அச்சின்னம் கிடைத்தும் தேர்தலை நடத்தவில்லை.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற நெருக்கடியால் தேர்தலை நடத்த முன் வந்ததாகச் சொல்லிக் கொண்ட ஆட்சியாளர்கள், தொகுதி வரையரைகள் சரியாக இல்லை, சரிசெய்ய வேண்டும் என்று காரணம் காட்டித் தொடர்ந்து தேர்தலைத் தள்ளிப்போட்டனர்.

மீண்டும் நீதிமன்றத் தலையீட்டினால் தேர்தலை நடத்துவதாகச் சொன்ன ஆட்சியாளர்கள் அதற்கு மாறாக உள்ளாட்சி அமைப்புகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை வழக்கம் போல் மேலும் 6 மாத காலம் நீட்டிக்கும் வகையில் மசோதா சட்டப் பேரவையில் முன் வைக்கப்பட்டுள்ளது.

இப்படித் தேர்தலை நடத்தாமல், தனி அதிகாரிகளின் மூலம் ஆட்சியை நடத்திவிடலாம் என்று நினைக்கும் அ.தி.மு.க. அரசு, தேர்தலைச் சந்தித்தால் தோல்வி நிச்சயம் என்ற பயத்தால் உள்ளாட்சித் தேர்தலை நடத்த அஞ்சுகின்றனர்.

மக்களாட்சியில் இது ஒரு ஜனனாயகப் படுகொலை.

ஆரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுந்தோம்! தமிழியத்தால் வெல்வோம்!



**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

**சென்னை மாவட்டம்**
**நடத்தும்**
**தொடர் பயிலரங்கம் - 1**

**தலைப்பு :**
**அம்பேத்கர் -பெரியார்**


நாள் : 22.07.2018 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
இடம் : இக்சா மையம், பாந்தியன் சாலை, எழும்பூர் அருங்காட்சியம் எதிரில், எழும்பூர், சென்னை.

நுழைவுகட்டணம் - ரூ.100
முன்பதிவு தொடர்புக்கு - 9994113558 - 6382097138

இப்படிக்கு
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
சென்னை

# அமர்நாத் பனிலிங்கமும் அறிவியலும்

செ.விஜயகிருஷ்ணராஜ்






அமர்நாத் குகை, இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் இயற்கையாகப் பனிக்கட்டியால் லிங்கம் உருவாகிறது என்பது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் நம்பிக்கை. பனியால் லிங்கம் உருவாவதற்கான அறிவியல் காரணங்களை நாம் தெரிந்து கொள்ளலாம்.

மலைப்பகுதிகளில் உள்ள குகைகளில், வெப்பநிலை உறைநிலைக்குக் கீழே (அதாவது 0° செல்சியசுக்கு கீழே) இருக்கும் போது, குகையின் மேற்பரப்பில் இருந்து குகைக்குள் ஊடுருவும் நீர்க்கசிவானது, தரையில் சிறிது சிறிதாகச் சேர்ந்து, புற்றுப் பாறைகள் எனப்படும் படிவுகள் உருவாகின்றன. இவை புற்றுப்பாறை (Stalagmite), விழுதுப்பாறை (Stalactite) என இருவகைப்படும்.

தரையிலிருந்து மேல்நோக்கி கரையான் புற்றுப்போல் வளர்வது புற்றுப்பாறை எனவும், மேலிருந்து கீழாக விழுதுபோல் இறங்குவது விழுதுப்பாறை எனவும் அழைக்கப்படும்.

பனியால் மட்டுமின்றி, எரிமலைக்குழம்பு, மணல், கனிமங்கள் ஆகியவற்றாலும் புற்றுப்பாறைகள் உருவாகின்றன.

உலகின் மிகப்பெரிய புற்றுப்பாறை, க்யூபா நாட்டில் உள்ளது. இதன் உயரம் 204 அடி. ●

## சென்னை மாவட்டக் கூட்டம்





திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டக் கூட்டம் 24.06.2018 அன்று, சென்னை, தலைமை அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் தோழர் சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 22.07.2018 அன்று எழும்பூர் இக்சா மையத்தில் ஒரு முழுநாள் பயிலரங்கம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மாவட்ட வரவு செலவு கணக்கு இக்கூட்டத்தில் வைக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மண்டலத் தலைவர் தோழர் மு.மாறன், தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின், வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் தோழர் கார்த்திக், தோழர் சிறிவித்தியா, தோழர் சபானா, தோழர் சரவணக்குமார், தோழர் திருக்குறளார், தோழர் சிறிநாத், தோழர் சைதை இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பல்லாவரத்தில் அஞ்சலி...






திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் காஞ்சிபுரம் மாவட்டம் சார்பில் பல்லாவரத்தில் 22.06.2018 அன்று நடைபெற்ற தெரு முனைக் கூட்டத்தில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது துப்பாக்கிச் சூடுபட்டு மரணமடைந்த 13 பேர்களுக்கு இக்கூட்டத்தின் சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.